# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 27 புதன்கிழமை (11.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204







# நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு பயணம்

## பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியது

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார். அங்கு செல்லும் பிரட்ஸ்கர் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் விடுதலைப்புலிகளின் உயர் மட்டப் பிரதி நிதிகளை சந்தித்து விவாதிக்கவுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ்-கருணா சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்கும் ஈ.பி.டி.பிக்குமிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இச் சந்திப்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் சார்பில் அதன் தலைவர் கருணாவுக்கும் இடையில் இடம் குறிப்பிடப்படாத இடத்தில் நேற்று முன்தினம் இவ் விசேட சந்திப்பு இடம் பெற்றதாக தெரி விக்கப்பட்டது.

சந்திப்பினையடுத்து இரு. தரப்பினருக்குமிடையில் அண்மைக்காலமாக ஏற்பட்ட முறுகல் நிலை தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாகவும் இருதரப்பினரும் தமது நடவடிக்கைகளை சுதந்திரமான முறையில் மேற்கொள்ளவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் இரு தரப்பும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தமிழர்களை நாம் ஒருபோதும் எதிரிகளாகக் கருதவில்லை

### அமைச்சர் மில்ரோய் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஒருவித பிரச்சினையும் இல்லை என்று தமிழக ஊடகங்களுக்கு நான் பேட்டி அளித்ததன் மூலம் தமிழகத்தில் சில சந்தேகங்கள் களையப்பட்டு விட்டன என்று அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் நேற்று மில்ரோய் பெர்னாண்டோ கூறியதாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ செய்தி ஊடகம் வெளியிட்டுள்ள செய்தி விபரம் வருமாறு, தமிழர்களை நாம் ஒருபோதும் எதிரிகளாகக் கருதவில்லை. பயங்கரவாதத்திற்கு எதிராகத்தான் அரசாங்கம் போராடுகின்றது. எனது தொகுதியில் உள்ள மூன்று கிராமங்களில் தமிழர்கள்தான் அதிகம் வசிக்கின்றனர்.

தமிழர்களுக் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் உள்ள அரசடிச் சந்தியில் வைத்து ஆயுதக்குழு ஒன்று தாக்குதல் நடாத்தியது. நேற்று பிற்பகல் இடம் பெற்ற இத் தாக்குதல் சுமார் பத்து நிமிடங்கள் வரை நீடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தினையடுத்து இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடாத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் வெளியாகவில்லை. இதே வேளை இச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நேற்று மாலை இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச)

## மாங்குளத்தில் கிளைமோர்த் தாக்குதல் தமிழீழ சுகாதார சேவையினர் ஐவர் பலி

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான மாங்குளத்தில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நேற்று நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு பணியாளர்கள், பொது மக்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

மாங்குளம் அருகாமையில் உள்ள கிராமத்திற்கு மருத்துவசேவை வழங்குவதற்காக தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவின் பணியாளர்கள் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது நேற்று முற்பகல் 10 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது என விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலான வெடிவிபத்தில் ஐவர் உயிரிழப்பு-புலிகள்

(கொழும்பு)

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற தவறுதலான வெடிவிபத்தில் போராளிகள் மூவரும் போர் உதவிப்படை வீரர்கள் இருவரும் வீரச்சாவைத் தழுவியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

லெப். கேணல் தமிழ்வாணன் உட்பட மூன்று போராளிகளும் இரண்டு துணைப் படை வீரர்களுமே உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (எ-5)

## பாங்கொக்கில் 50 தமிழர்கள் கைது

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் தங்கியிருந்த இலங்கையர்கள் 50 பேரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் விசா இன்றி தங்கியிருந்த காரணத்தினாலேயே கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் 26சிறுவர்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளுக்கு செல்லும் வகையில் பாங்கொக்கில் பெருமளவான இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## புலிகளின் பகுதிகளை நோக்கி வவுனியாவில் எறிகணை வீச்சு

வவுனியாவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி இராணுவம் செறிவான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து வருவதாகவும் படையினரின் எறிகணை தாக்குதல் காரணமாக பெருமளவு சொத்துக்கள் அழிவடைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

வவுனியா முன்னரங்க நிலைகளில் இருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி நோக்கி இராணுவம் கடந்த வாரம் முதல் கடுமையான எறிகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

பம்பைமடு, கிடாச்சூரி மற்றும் பூவரசங்குளம் ஆகிய (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கை மீட்பது குறித்து விமர்சிப்பது தேசத்துரோகம்

### ஹெகலிய ரம்புக்வெல விசனம்



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றுவது தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்பது தேசத்துரோகம் என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் கைப்பற்றுவதில் அர்த்தமில்லை. அது முக்கியத்துவம் இல்லாத நடவடிக்கை என சிலர் தவறாக கதை பரப்பி வருகின்றனர். கிழக்கை உள்ளடக்காத ஈழத்தை பிரபாகரன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார். அங்குள்ள பொருளாதார நலன்களுக்காகவே பிரபாகரன் இதனை அடைந்து கொள்ள நாட்டம் கொண்டுள்ளார்.

கிழக்கை மீட்கும் முயற்சி தேவையற்ற தொரு நடவடிக்கை எனக்கூறுவது அபத்தமானது. கிழக்கை மீட்பது எமது நாட்டின் தேசிய பிரச்சினை. அதனை அரசியல் லாபம் தேடும் ஒன்றாக மாற்ற சிலர் முயற்சித்து வருகின்றனர். புலிகளின் பிரதான ஏழு தாக்குதல் (06 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே


கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னோடி வினாத்தாள் A/L 2007 யூலை இரசாயனவியல் - I

சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரட்ஸ்கர் புலிகளுடன் பேசினால் சாதகமான சமிக்ஞை கிடைக்கும்

## அரச சமாதான செயலகம் நம்பிக்கை

(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வன்னிக்கான விஜயத்தை மேற்கொண்டு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் புலிகள் நிச்சயம் பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சமிக்ஞையை வழங்குவார்கள்.

இதன் மூலம் மாற்றம் ஒன்று ஏற்படும் என்று நம்புகின்றோம். விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என எதிர்பார்க்கின்றோம் என்று அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ராஜி விஜயசிங்க தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்துக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும்கூறியதாவது,

தற்போதைய நிலையில் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வன்னிசென்று புலிகளுடன் பேச்சு நடத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகின்றது.

புலிகளுடன் பிரட்ஸ்கர் பேச்சு நடத்தினால் புலிகள் நிச்சயம் சமாதானப் பேச்சுக்குச் சாதகமான சமிக்ஞையை வெளியிடுவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கம் பேச்சுவார்த்தையை நடத்த எப்போதும் தயாராகவேயிருக்கின்றது. இதே வேளை போர்நிறுத்த உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்துத் தீர்மானிக்க வேண்டியது அரசியல் சம்பந்தப்பட்ட தீர்மானமாகும்.

அதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும்என்பது எமது நிலைப்பாடாகும். இந்த விடயத்தில் பல சிக்கல்கள் உள்ளன. ஆரம்பத்திலிருந்து போர்நிறுத்த உடன்படிக்கையை சரியான முறையில் பின்பற்றப்படவில்லை என்பதே எனது கருத்தாகும்.

தற்போதைக்குப் போர் நிறுத்த உடன்படிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. ஆனால் அதிலுள்ள சிறந்த விடயங்கள் கூட சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்ற ஆதங்கம் என்னிடம் இருக்கின்றது.

எப்படியிருப்பினும் போர்நிறுத்த உடன்படிக்கை பலப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். போர்நிறுத்தஉடன்படிக்கையை அமுல்படுத்தும் விடயத்தில் அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகள் தரப்பில் குறைபாடுகள் இருக்கலாம்.

இரண்டு தரப்பினரும் சரியான முறையில் அதனைப் பின்பற்ற வேண்டும். நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து புலிகள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் மீது சந்தேகம் வெளியிடப்படுவது உண்டு. ஆனால் அவை தீர ஆராயப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்.

சில கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக விசேட அதிரடிப் படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நான் இவ் விடயம் குறித்து ஆராயுமாறு விசேட அதிரடிப் படையினரிடம் கேட்டுக் கொண்டேன்.

எனவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர ஆராய்ந்து அறிக்கை வெளியிட வேண்டும் என்றார். இதேவேளை இன்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் கிளிநொச்சி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மதுபானங்களுக்கு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு விற்பனை விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் யாழ்.மாவட்ட உதவி மதுவரி ஆணையாளருடன் கலந்தாலோசித்து விலைகள் நிர்ணயிக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட விலைகள் வருமாறு,

| வகை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| மெண்டிஸ் அதி விசேடம் | 600/= | 625/= |
| மெண்டிஸ் விசேடம் | 700/= | 725/= |
| றந்தனிகல அதி விசேடம் | 600/= | 625/= |
| AEF சாராயம் அதிவிசேடம் | 600/= | 625/= |
| 33.5 மதுசார செறிவுள்ள அதிவிசேட சாராயம் | 600/= | 625/= |
| பியர் | 200/= | 225/= |

மதுபான விற்பனையில் ஈடுபடும் உத்தரவுப்பத்திரகாரர்கள் கட்டாயமாக தமது விற்பனையை மேற்குறிப்பிட்ட விலைகளில் மாத்திரம் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

தவறும் பட்சத்தில் அவ்வுத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு மதுவரித் திணைக்களத்திற்கு சிபார்சு செய்யப்படும். மேற்குறிப்பிட்ட விலைகளை சகல மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரிகளும் நடைமுறைப் படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இது சம்பந்தமான முறைப்பாடுகளை யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் 222 3451/222 8000/226 4222 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஹலோ ரெஸ்ட் பணியாளர்கள் 10பேர் பணிக்குச் செல்ல முடியாத நிலை!

(கொழும்பு)

ஹலோ ரெஸ்ட் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பணியாற்றும் 10 ஊழியர்கள் இராணுவத்தினரின் அழுத்தம் காரணமாகப் பணிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹலோ ரெஸ்ட் நிறுவனமானது யாழ்ப்பாணத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் யாழ்.அலுவலகத்தில் பணியாற்றும் 10 பணியாளர்கள் தொடர்பில் தமக்குச் சந்தேகம் உள்ளதாகக் கூறியுள்ள இராணுவத்தினர் மேற்படி பணியாளர்கள் பாதுகாப்புத் தரப்பிடமிருந்து அனுமதி பெற்ற பின்பே அவர்களை மீண்டும் பணிக்கு அனுமதிக்க வேண்டுமென இராணுவம் குறித்த நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மேற்படி 10 பணியாளர்களும் பணிக்குச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்தப் பணியாளர்கள் கடந்த ஒருவார காலமாகப் பணிக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பாதுகாப்புத் தரப்பால் வழங்கப்படும் அனுமதியைப் பெற்றதும் மேற்படி 10 பணியாளர்களும் மீண்டும் பணியில் இணைந்து கொள்வதில் எவ்வித சிக்கலும் இருக்காது என ஹலோ ரெஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-5)

## இந்தியாவில் வைத்து யாழ்.இளைஞன் கைது

(தூத்துக்குடி)

இலங்கையிலிருந்து இந்தியா சென்ற இளைஞனை தூத்துக்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து தோணியில் 4 மாதங்களுக்கு முன் சத்யா என்பவர் இராமநாதபுரம் மாவட்ட தங்கச்சி மடத்திற்கு வந்தார்.

அவர் இராமநாதபுரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் 15 நாள்கள் வேலை பார்த்துள்ளார். பின் மகாராஷ்டிரா மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு ரயில் ரிக்கெட் இல்லாமேயே சென்று வந்துள்ளார்.

நேற்றிரவு மதுரை வழியாக தூத்துக்குடி வந்த இவரை தூத்துக்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## ஐ.தே.க. - சு.க.மக்கள் பிரிவுக்கிடையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவிற்கும் இடையில் இன்னும் சில நாள்களுக்குள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாக கட்சி வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் சார்பில் கட்சி ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவும் கைச்சாத்திடவுள்ளனர்.

ஊழல், பீதி ஆகியவற்றை ஒழித்து மனித உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துப் பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் நோக்கில் இரண்டு கட்சியினரும் இணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டம் தொடர்பாகவே இந்தப் புரிந்துணர்வுஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் கொள்கை தொடர்பாக சர்வதேச ரீதியில் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தில் முதல் கட்டமாக மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதனால் அதற்கு முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும்எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானகுழுவினருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளருமான மங்கள சமரவீர தலைமையிலான குழுவினருக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எதிர்வரும் வாரத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பவுள்ளது.

என்னும் கைச்சாத்திடப்படவுள்ள திகதி இன்னமும் குறிப்பிடப்படவில்லை. இவ்விரு கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது உறுதியாகியுள்ளபோதும் ஒப்பந்தத்தில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன என்பது குறித்து தெரிவிக்க முடியாது என்றார். (எ-1)

## முன்பள்ளி விளையாட்டு

உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாநகர சபை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 12.30 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவிலுள்ள பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபைச்செயலாளர் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (ச)

## பயிற்சி நிறைவு நாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்குதலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பயிற்சி பெறும் முகிழ்நிலை ஆசிரியர்களிடம் ஆங்கில மொழித் திறனை விருத்தியடையச் செய்வதற்காக நடத்தப்பட்டு வரும் 'Emmerson' பயிற்சி நெறியின் நிறைவு நாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆயவன் தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வுக்கு தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.ஏ.தேவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

இந்நிகழ்வின் ஆங்கில மொழித் திறனை வெளிப்படுத்தும் 'SPURT' சஞ்சிகை வெளியீடும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.(ச)


## பதவி வெற்றிடங்கள்

- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
- விளம்பர முகவர்கள் (ஆண்கள்)
- கணினிப் பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)
- ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் (ஆண்கள்)
- ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)

தகுதியுடையவர்களும், அலுவலகத்திற்கு அண்மையில் வசிப்பவர்களும் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி

# றோயல் கல்லூரி கொழும்பு – 7

## க.பொ.த. [உயர்தர] முன்னோடிப் பரீட்சை ①

ஜூலை 2007

**இரசாயனவியல் – I**

நேரம் – 2 மணித்தியாலயம்

*முக்கியம்:-* * இவ்வினாத்தாள் 10 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக
* 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கம்... இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் ... தெரிவு செய்து அதனை விடைத்தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிக்க.


அகிலவாயுமாறிலி $R=8.314\ JK^{-1}\ mol^{-1}$
அவகாதரோ மாறிலி $N_A = 6.022 \times 10^{23}\ mol^{-1}$

1. சோடி சேராதா ஆறு இலத்திரன்களை கொண்ட மூலகச் சோடிகளின் அணு வெண்கள்.
(1) 25, 43 (2) 24, 97 3) 24,42 (4) 22,42 (5) 22,42

2. K, Ca, Se, Kr, Br ஆகிய மூலங்களில் எவை முறையே தாழ்ந்தத உயர்ந்த அயனாக்கற் சக்திகளைக் கொண்ட மூலகச் சோடிகள்?
(1) K உம் Br உம் 2) K உம் Kr உம் 3) Se உம் Kr உம்
4) Ca உம் Kr உம் 5) Ca உம் Se உம்

3. பின்வரும் சோடிகளில் எது உயர்ந்த இடைக்கவரர்ச்சி விசைகளைக் கொண்டது?
(1) $H_2O, H_2O$ 2) HF, HF 3) $NH_3, NH_3$
(4) HF, F 5) $CH_3OH, H_2O$

4. $SF_4$ இன் முப்பரிமாணக் கட்டமைப்பை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுவது




5. 0.1 mol tin (II) thiosulphate உடன் தாக்கம் புரியத் தேவையான அமில $KMnO_4$ இன் மூல் எண்ணிக்கை.
(1) 0.133 (2) 0.75 (3) 0.08 (4) 0.125 (5) 0.06


6. பின்வரும் CL சேர்வைகளில் முறையே அயன்த அயன் பங்கீட்டு பங்கீட்டு சேர்வைகளைச் சரியான வரிசையில் கொண்டது?
1) $HOCl, HClO_3, KOCl$ 2) $Ca(ClO)_2, NCl_3, PbCl_4$
3) HCl, NHCl, NOCl 4) NaCl, ICl, NCl
5) $CaCl_2, (ClO)_2, PbCl_4$

7. 3.90g ஓர் வலுவளவு உலோக நைத்திரேற்று முற்றாக வெப்பப் பிரிகை அடைந்து 3.58g திண்ம மீதியைக் கொடுத்தது. உலோகத்தின் சார் அணுத்திணிவு
1) 23 2) 39 3) 133 4) 137 5) 148

8. $C_3H_5Cl$ மூலக்சுற்று சூத்திரமாகக் கொண்ட சேர்வைக்கு சாத்தியமான சமபாகுதியங்களின் எண்ணிக்கை.
1) 4 2) 5 3) 6 4) 7 5) 8

9. $CH_3CH(OH)CH_2COCH_2C\ \ CH$ இன் பெயர்
1) 6-hydroxyhept - 1 -yne - 4-one 2) 6 - hydroxyheptyn - 4- one
3) 2- hydroxyhept - 6-yne - 4- one 4) 6- hydroxyhept - 1-yn-4- one
5) 2- hydroxyhept - 6 -yne -4 - one

10. வயிற்றினுள் அஸ்பிரின் (Asprin)  ஆனது அமிலப் பழச்சாற்றால் நீர்பகுப்பிற்கு உட்படும் போது பெறப்படும் விளைவுகள்




11. $7N_2O_4(l) + C_9H_{20}(l) \longrightarrow 9CO_2(g) + 10H_2O(g) + 7N_2O$
161.0g $N_2O_4(l)$ ஆனது 64.0g $C_9H_{20}$ உடன் முற்றாகத் தாக்கமுற்று உருவாகிய வாயுவின் கனவளவு STP இல் (N=14, O=16, C=12, H=1 STP இல் வாயுவின் மூலர்க் கனவளவு 22.4 $dm^3$ எனவும் இவ்வாயு இலட்சிய நடத்தை உடையது எனவும் கொள்க.
1) 291.2 $dm^3$ 2) 145.6 $dm^3$ 3) 14.56 $dm^3$ 4) 2.912 $dm^3$ 5) 89.6 $dm^3$

12. பின்வரும் தாண்டல் உலோக ஒட்சைட்டுத் தொடர்களில் ஈரியல்பை மட்டும் கொண்டவை.
1) ZnO, $TiO_2$, V2$O_5$ 2) $Sc_2O_3, MnO_2, MnO$ 3) $Cr_2O_3, V_2O_5TiO_2$
4) $Cr_2O_3, MnO_2, VO_2$ 5) $ZnO, Cr_2O_3, MnO$

13. 30.0g ethanoic acid உம் 45.0g நீரும் கொண்ட கலவைக்கு 15.0g metha nal சேர்க்கும் போது நீரின் மூல் பின்னத்தில் ஏற்படும் மாற்றம் (H=1, O=16, C=12)
1) 0.142 2) 0.119 3) 0.166 4) 0.714 5) 0.833

14. பின்வருவனவற்றில் எதில் எல்லா காபன் காபன் பிணைப்பு நீளங்களும் சமனாகக் காணப்படும்.
1) $CH_3CH=CH_2$ 2) $CH_3CH=CHCH_3$ 3) $CH_2=\underline{C}HCH_2\overset{+}{C}H_2$
4) $CH_2=CHCH_2$ 4) CH≡C-C≡CH

15. "நைதரசனின் ஒட்சைட்டுக்களின் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை பெரும் பாலும் புறவெப்பம்" மேலே உள்ள கூற்றை நிருபிப்பதற்கு பின்வருவனவற்றில் எது மிகவும் பொருத்தமானது?
1) நைதரசனின், உயர் இலத்திரன் நாட்டம்
2) நைதரசனின் உயர் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை
3) நைதரசனினதும் ஒட்சிசனினதும் மின்னெதிர்த் தன்மை பெருமளவில் ஒத்தவை
4) ஒட்சிசனின் உயர் இலத்திரன் நாட்டம்.
5) ஒட்சிசன் அணுவால் $O^{2-}$ அயனை உருவாக்குவதற்கு உரிய வல்லமை.

16. A-$Fe^{2+}$ யும் $Fe^{3+}$ ஐயும் கொண்ட கரைசலினுள் பிளாற்றினம் கோல் பகுதியாக அமிழ்த்தப்பட்டுள்ளது. B-$Fe^{2+}(aq)$ கரைசலினுள் இருப்புக் கோல் பகுதியாக அமிழ்த்தப்பட்டுள்ளது.
A, B என்பன உப்புப் பாலத்தினூடு இணைக்கப்பட்டுள்ளது. A யும் B யும் வெளிச் சுற்றில் வோல்ற் மானிக்கு இணைக்கப்பட்டுள்ளது.

$Fe^{2+}/Fe\ (aq)$ $E^{\ominus} = 0.44V$

$Fe^{3+}(aq)/Fe^{2+}(aq)$ $E^{\ominus} = 0.77V$

மேற்படி கலத்தைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது.
1. மின்னோட்டம் A யில் இருந்து B இற்கு செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 1.21V ஆகும்.
2. மின்னோட்டம் B இல் இருந்து A யிற்கு செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 1.21V ஆகும்.
3. மின்னோட்டம் A யில் இருந்து B இற்கு செல்லும் அதேநேரம் கலத்தின் மின்னழுத்தம் 0.33V ஆகும்.
4. மின்னோட்டம் B இல் இருந்து A யிற்கு செல்லும் அதே நேரம் கலத்தின் மின்னழுத்தம் 0.33V ஆகும்.
5. இலத்திரன் பாய்ச்சல் கதோட்டு B யில் இருந்து அனோட்டிற்கு பாயும் போது A யானது அனோட்டாகச் செயற்படும்.

17. பின்வரும் ஒட்சைட்டுக்களில் எது (Caustic-Potash) எரிபொற்றாசுக் கரைசலில் கரைதிறன் மிகவும் குறைந்தது எது?
1) $Al_2O_3$ 2) MgO 3) $P_4O_{10}$ 4) $SiO_2$ 5) $B_2O_3$

18) பின்வரும் அமிலத் தொடர்களில் எது அமில வலிமையின் ஏறுவரிசை, அல்லது இறங்கு வரிசை ஒழுங்குப்படி காணப்படுகின்றது?
1) $H_3PO_3, H_3PO_4 H_2SO_4$ 2) $H_3PO_?, H_3PO_4, H_2S_?O_7$ 3) $H_3PO_2, H_2C_2O_4, H_3PO_4$
4) $H_3PO_2\ H_2SO_4\ HClO_3$ 5) $H_?PO_4, (HPO_3)_3, HIO_4$

19) அமோனியம் பெரிக்குச் சல்பேற்றின் (ammonium nospare ferric sulphate) சூத்திரம் $(NH_4)_2SO_4 \cdot Fe(SO_4)_3 \cdot 24H_2O$ 1.5055x$10^{23}$ ஐதரசன் அணுக்களைக் கொண்ட மேற்படி உப்பின் திணிவு யாது?
1) 4.3g 2) 4.13x$10^{-2}$g 3) 43.0 g 4) 4.13x $10^{-1}$g 5) 41.3g

20. இருவலுவுள்ள உலோகம் A யின் குளோரைட்டு (C), சல்பேற்று (S), பொசு பேற்று (P) ஆகியவற்றின் கரைதிறன் பெருக்கங்கள் முறையே 8x$10^{-12}mol^3dm^{-9}$, 4x$10^{-12}mol^2dm^{-6}$, 1.08 x$10^{-12}mol^5dm^{-15}$ ஆகும். யின் நிரம்பிய ஒவ்வொரு உப்புக் கரைசல்களின் 100$cm^3$ இலும் காணப்படும் $A^{2+}$ அயன்களின் அளவுகளின் ஏறுவரிசை
1) C,S,P 2) C,P,S 3) S,P,C 4) P,S,C 5) S,C,P

21. $CH_3OH$ உம் $CH_3CH_2OH$, உம் திணிவு ரீதியில் 4:23 ஐக் கொண்ட இலட்சியக் கரைசலை ஆக்கும். குறித்த வெப்பநிலையில் மூடிய தொகுதியொன்றில் இக் கரைசலானது அதன் ஆவியுடன் சமநிலையில் உள்ளது. இவ் வெப்பநிலையில் மெதனோல், எதனோல் என்பற்றின் ஆவி அமுக்கங்கள் முறையே 80mmHg, 60mmHg ஆகும். இவ் வெப்பநிலையில் கரைசலின் மேல் உஞற்றப்படும் ஆவியமுக்கம்
1) 70mmHg 2) 72mmHg 3) 74 mmHg 4) 66 mmHg 5) 64mmHg

22. $10^{-3}moldm^{-3}\ CH_3COOH$ நீர்க் கரைசலைக் கருதுக. மேற்படி நீர்க்கரைசலைப் பற்றிய உண்மையானது.
1) காய்ச்சி வடித்த நீரைச் சேர்ப்பதன் மூலம் இதன் செறிவை 10மடங்காக ஐதாக்கும் போது பெறப்படும் கரைசலின் PH, 4 ஆகும்.
2) இதற்கு NaOH கரைசலைச் சேர்க்கும் போது இதன் PH அதிகரிக்கும்.
3) இக் கரைசலை 100மடங்காக ஐதாக்கும்போது $OH^-$ இன் செறிவு 100 மடங்காக குறைவடையும்.
4) இதற்கு HCl(aq) சேர்க்கும்போது PH பெறுமானம் அதிகரிக்கும்.
5) இதற்கு காய்ச்சி வடித்த நீர் சேர்க்கும்போது கூட்டற்பிரிவின் அளவு அதிகரிக்கும்.

23. குறித்த சேர்வையொன்று
- தொலனின் சோதனைப் பொருளுடன் தாக்கம்புரியும்.
- இலகுவில் ஒட்சியேற்றப்படவும் தாழ்த்தப்படவுங் கூடியது.
- Conc $H_2SO_4$ இனால் நீர் அகற்றப்படக்கூடியது.
- போலிங்கின் கரைசலுடன் தாக்கம் புரியும்.


இச் சேர்வையாக இருக்கக்கூடியது
1) ethanoic acid 2) ethanol 3) propanone 4) methanal 5) methanoic acid

24. P $CH_3COCl \xrightarrow{C_6H_5NH_2}$
Q $CH_3COCH_3 \xrightarrow{dil\ NaOH}$
Q $C_3H_5COCH_3 \xrightarrow{C_6H_5NHNH_2}$

மேற்படி தாக்கங்களின் பொறிமுறைகளைக் கருதுக.
(a) கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கம் மட்டும் ($S_N$)
(b) கருநாட்டக் கூட்டல் தாக்கம் மட்டும் ($A_N$)
(c) கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கமும் நீக்கல்த் தாக்கமுமாகும். ($S_N$ உம் E உம்)
(d) கருநாட்டக் கூட்டல் தாக்கமும் நீக்கல்த் தாக்கமுமாகும். ($A_N$ உம் E உம்)

மேலே தரப்பட்ட தாக்கங்கள் P, Q, R ஆகியவற்றின் பொறிமுறைகளின் சரியான ஒழுங்கு
1) a,b,d 2) a,d,b 3) b,b,d 4) c,b,d 5) c,b,b

25. பின்வரும் சேர்வைத் தொடர்களில் மூல இயல்பு அதிகரிக்கும் சரியான வரிசையைக் கொண்டது.
1) $H_2O < NH_3 < CH_3CONH_2 < NaOH$ 2) $NH_3 < CH_3CONH_2 < CH_3CN < (CH_3)_3N$
3) $CH_3CN < (CH_3)_2C{=}NH < NH_3 < (CH_3)_2NH$ 4) $(CH_3)_2C{=}NH < CH_3NH_2 < (NH_2)_2C{=}NH < (CH_3)_4NOH$
5)




26. $CH_3CH(OH)CH_2C\equiv CH$ எனும் சேர்வை பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது
1) இதன் ஒரு மூலானது மிகையான $CH_3MgBr$ உடன் தாக்கம் புரிந்து 1mol, $CH_4$ ஐக் கொடுக்கும்.
2) NaOH(aq) இது உடன் தாக்கம் புரியாது ஆனால் $LiNH_2$ உடன் தாக்கம் புரிந்து வாயு விளைவைக் கொடுக்கும்.
3) இது திண்மச் சமபகுதியத்தைக் காட்டாது.
4) இது $KMnO_4$ இனால் ஒட்சியேற்றப்படமாட்டாது.
5) இதன் ஒரு மூலானது மிகையான Na உடன் தாக்கம் புரிந்து இரண்டு மூல்கள் $H_2$ வாயுவைக் கொடுக்கும்.

27) பின்வரும் தாக்கத்தின் நியம வெப்பவுள்ளுறை மாற்றம்
$4CH_3NHNH_2(l) + 5N_2O_4(g)\quad 4CO_2(g) + 9N_2(g) + 12H_2O(l)$
✡ $CH_3NHNH_2(l)$ இன் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை -20kjmol$^{-1}$
✡ $H_2(g)$ இன் நியமத் தகன வெப்பவுள்ளுறை -285 kjmol$^{-1}$
✡ C(Graphite) இன் நியமத் தகன வெப்பவுள்ளுறை -394kjmol$^{-1}$
✡ $N_2(g)$ இன் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை -949kjmol$^{-1}$
1) -488kjmol$^{-1}$ 2) +4884 kjmol$^{-1}$ 3) +5108 kjmol$^{-1}$ 4) -5108kjmol$^{-1}$ 5) +3406 kjmol$^{-1}$

28) பின்வரும் பதார்த்தங்களைக் கருதுக
$[Cu(NH_3)_2]^+(aq)$, $[Co(NH_3)_6]^{3+}(aq)$, $Mn(OH)_2]^+(aq)$, $FeCl_3(aq)$, No(g)
இப் பதார்த்தங்கள் ஒவ்வொன்றும் வேறாக திறந்த முகவையினுள் வைக்கப்படும்போதுதபின்வரும் எந்த கூட்டப் பதார்த்தங்களில் அவதானிக்கக் கூடிய குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தைக் காணலாம்.
1) $[Cu(NH_3)_2]^+(aq)$, $FeCl_3(aq)$, NO(g) 2) $[Cu(NH_3)_2]^+(aq)$, $Mn(OH_2)(aq)$, NO(g)
3)) $[Co(NH_3)_6]^{3+}(aq)$, $FeCl_3(aq)$, NO(g)
4) $[Co(NH_3)_6]^{3+}(aq)$, $CuNH_3)]_2Mn(OH)_2(aq)$
5) $[Co(NH_3)_6]^{3+}(aq)$, $Mn(OH)_2(aq)$ $FeCl_3(aq)$

(தொடரும்)

# இன்று ஒரு தகவல்

## சனியின் சங்கடம்

ஒரு நண்பர் அவருக்குச் சோதிடத்திலே நம்பிக்கை அதிகம். அடிக்கடி சோதிடம் பற்றிப் பேசிக்கொண்டேயிருப்பார் 'இப்பொழுது எனக்கு நேரம் சரியாக இல்லை... சனி மாறினால் எல்லாம் சரியாகிவிடும்' என்பார்.

'சனியைக் கண்டு பயப்படாதீங்க சார்' என்றேன்

'எப்படி பயப்படாமல் இருக்கமுடியும்?' என்றார் அவர்

'சனியாலே ஏற்படும் இடைஞ்சலை விட... சனி பற்றிய பயத்தினாலே ஏற்படும் இடைஞ்சல்தான் அதிகம்' என்றேன். அவர் ஒரு மாதிரியாக என்னைப் பார்க்க ஆரம்பித்தார். அது சம்பந்தமாக நான் ஏற்கெனவே கேள்விப்பட்ட ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தேன் !

அது என்ன கதையென்றால்

கைலாயத்திலே இருக்கிற பரமசிவனைப் பார்ப்பதற்கு பக்த கோடிகள் நிறையப் பேர் வர ஆரம்பித்தார்களாம். அவர்கள் அங்கே வசதியாகத் தங்குவதற்கு ஒரு மண்டபம்கூட இல்லை... மழை, காற்று, வெயிலே கஷ்டப்பட்டார்கள். பார்ப்பதற்குப் பாவமாக இருந்தது. பார்வதி தேவி இதைக் கவனித்தார்.

பரமசிவனைத் தேடி வருகிறவர்களுக்கு நிழலாக, பாதுகாப்பாக ஒரு மண்டபம் கட்டலாமென நினைத்து அதன்படியே ஒரு மண்டபமும் கட்டப்பட்டது. அதன்பின் அங்கேயொரு சோதிடர் வந்திருக்கிறார்.

அவர் மண்டபத்தைப் பார்த்தார்... அப்புறம் சொன்னார், 'அம்மா... நீங்கள் மண்டபம் கட்டின நேரம் சரியில்லை... சீக்கிரமே சனிவந்து உட்காரப் போகிறார்... உடனே இந்த மண்டபம் இடிந்துவிழப் போகிறது...' என்றார். இதைக் கேட்டதும் பார்வதிக்குக் கோபம் வந்துவிட்டது. நேராகப் பரமசிவனிடம் போனார்.

'என்னங்க... இதைக் கேட்டீர்களா?' என்றார்

'என்ன ஆச்சு?' என்றார் பரமசிவம்

'நான் கட்டியிருக்கிற மண்டபத்திலே சனிவந்து உட்காரப் போகிறாராம்... மண்டபம் இடிந்துவிழப் போகிறதாம்... சோதிடர் சொல்கிறார்... எனக்குப் பயமாக இருக்கிறது...'

'நான் கட்டிய மண்டபத்தைச் சனி வந்து இடிக்கிறது என்றால்... நமது கௌரவம் என்ன ஆகும்?... என்னைவிடப் பெரிய ஆளாசனி? அதன்பின் நம்மாலே தலை நிமிர்ந்து நடக்க முடியுமா?' என்றார் பார்வதி.

'நீ சொல்வதும் நியாயம் தான்... இப்பொழுது என்ன செய்வது?' என்று கேட்டார் பரமசிவம் 'நீங்கள் இப்பொழுதே புறப்பட்டுச் சனியிடம் சொல்லுங்கள்.. நீ இங்கே வரக்கூடாது மண்டபம் இடியக்கூடாது என்று சொல்லுங்கள்' என்றார்.

பரமசிவன் யோசித்தார்... 'இதோபார் தேவி... சனிக்கு சகல சக்திகளையும் நாமே கொடுத்துவிட்டு இங்கே வரக் கூடாது என்று சொல்வது நியாயமில்லை... அதேநேரம் மண்டபம் இடிந்தால் உன்கௌரவம் பாதிக்கப்படும் என்பதும் நியாயம்தான்.

ஒன்று செய்யலாம். நான் நேராகச் சனியிடம் போகிறேன்... இங்கே வரவேண்டாமென்று சொல்லிப் பார்க்கிறேன்... சரி என்று ஒத்துக்கொண்டால் பரவாயில்லை... முடியாது என்று சொல்லிவிட்டால் நான் அங்கே இருந்தபடியே என் உடுக்கையை ஆட்டி சத்தம் கொடுக்கிறேன்.

அச்சத்தை வைத்து நீ விஷயத்தைப் புரிந்துகொண்டு சனி இங்கே வருவதற்குள் மண்டபத்தை நீயே இடித்துத் தள்ளிவிடு யாராவது கேட்டால்... ஏற்கெனவே கட்டியிருக்கிற அமைப்புப் பிடிக்கவில்லை... புதுப்பித்துக்கட்டப் போகிறேன் என்று சொல்லிவிடு... சனிவந்து இடித்தால் தானே கௌரவக்குறைச்சல்! அதற்கு முன் நீயே இடித்துவிடு! உன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்... என்றார்.

சரி... அப்படியே செய்வோம் என்று பார்வதியும் ஒத்துக்கொண்டார் பார்வதி தேவி ! பரமசிவன் புறப்பட்டுப் போனார். சனீஸ்வரனைப் பார்த்தார் விபரத்தைச் சொன்னார்.

சனீஸ்வரன் அதைக் கேட்டவுடனே 'இவ்வளவு தூரம் நீங்களேவந்து கேட்டபிறகும் அதனை மீறி நான் அங்கே வருவேனா? மண்டபத்தை இடிப்பதில் எனக்கும் விருப்பமில்லை இதற்குப் பிரதிபலனாக நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்' என்று சொன்னார்.

என்ன செய்யவேண்டும் சொல்! என்றார் ஈஸ்வரன். 'ஒரே ஒருதடவை உங்கள் ஆனந்தத்தாண்டவத்தை நான் பார்க்க வேண்டும்... அதுதான் என் ஆசை' என்றார் சனீஸ்வரன்.

'அவ்வளவு தானே? இதோ ஆடுகிறேன்.. பார்த்துக் கொள்' என்று சொல்லி பரமசிவனும் ஆட ஆரம்பித்தார் அப்பொழுது அவர் கையிலே இருந்த உடுக்கை இயல்பாகவே அசைய ஆரம்பித்தது... அந்தச் சத்தம் பார்வதி காதிலே விழுந்தது... அவ்வளவுதான்.

சரி... சனி சம்மதிக்கவில்லைப் போல இருக்கிறது. அதனாலேதான் உடுக்குச்சத்தம் கேட்கிறது... என்று முடிவு செய்து சனிவந்து இடிப்பதற்கு முன்னரே நானே இடித்துவிடுவோம் என்று மண்டபத்தை இடித்துத் தள்ளிவிட்டார்.

பரமசிவன் வந்து பார்த்ததும்தான் நடந்த விபரம் புரிந்ததாம் இப்படி ஒருகதை உண்டு. யாராக இருந்தாலும் எச்சரிக்கை அவசியம் என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம். நம்ம ஆசாமி ஒருத்தன் வீடு கட்டினான்... அப்புறம் ஜோசியம் பார்த்தான்.

ஜோசியர் சொன்னார்' நீ வீடு கட்டிய நேரம் சரியில்லை. கிரகப்படி பார்த்தால் இந்த மாதம் பத்தாம் திகதி சனிவந்து உட்காரப் போகிறார் இந்த வீட்டிலே' என்றார். 'பத்தாம் திகதிதானே நான் அங்கே குடிபோகலாம் என்று நாள் பார்த்து வைத்திருக்கிறேன்' என்றார் அந்த ஆசாமி 'அதைத்தானே சொன்னேன்' என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சனி மாற்றம்



## இடபம்

சனிபகவான் உங்கள் ராசிக்கு தைரிய தானத்தில் இருந்து அர்த்தாஷ்டமம் என்கிற நாலாம் ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இது சற்று குறைபாடான அம்சமாகும். நாலாம் ராசியை 'சுகஸ்தானம் என்று அழைப்பார்கள்.

இந்த சுகஸ்தானத்தில் சனிபகவான் அமர்வதால் உங்களுக்கு அவ்வப்போது சிறுசிறு உடல் உபாதைகள் உண்டாகும். வாகனப் பராமரிப்புச் செலவுகள் கூடும். இருப்பினும் சனி பகவான் நிற்கும் இடம் அபிவிருத்தியாகும் என்கிற கூற்றுப்படி யோகபலன்கள் உண்டாகாமல் போகாது.

அதேநேரம் பொருளாதாரத்தில் இடையில் சற்று தொய்வு நிலையைக் கொடுப்பார். சண்டை சச்சரவுகளினால் குடும்பத்தில் அமைதி குலையும். சுகஸ்தானத்தில் அமர்ந்து கண்ட சனியாக உள்ள சனிபகவான் மனதிற்குத் திருப்தி இல்லாத இடமாற்றங்களைத் தருவார்.

## உங்களுக்கு எப்படி

சிலர் வேறு ஊர்களுக்கு குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடும். எடுத்த காரியங்கள் அலைச்சல் திரிச்சலுக்குப் பிறகே முடிவடையும். தாய் வழியில் சில சோதனைகளையும் சிலர் சந்திக்க நேரிடும். தவிர அவருக்கு மருத்துவச் செலவுகளையும் செய்யும் நிலை உண்டாகலாம்.

சனி பகவானின் பார்வை உங்கள் ராசியின் மீது படுவதால் உங்களின் ஆற்றலில் சிறிது குறைபாடு ஏற்படும். சோம்பலுக்கு இடம் தராமல் கடின உழைப்பை மேற்கொள்ளுங்கள் எந்தச் செயலையும் பிறகு செய்துகொள்ளலாம் என்று ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செய்து முடிக்கவும். இல்லையேல் மறந்துவிடும் வாய்ப்பு உள்ளது.

சிலருக்கு கை, கால்களில் காயம் ஏற்படலாம். அதனால் பயணம் செய்யும் நேரங்களில் கவனமாக இருக்கவும். சனி பகவானின் பார்வை உங்கள் ராசிக்கு ருண, ரோக, சத்ரு ஸ்தானங்களின் மீது படுவதால் உங்களின் உடல் ஆரோக்கியம் சற்று பாதிக்கப்படலாம். அதனால் எத்தகைய உடல் உபாதைகள் ஏற்பட்டாலும்த தாமதிக்காது உடனுக்குடன் வைத்தியம் செய்துகொள்ளவும்.

எவருக்கும் முன் ஜாமீன் போடுவதோ வாக்குக் கொடுப்பதே கூடாது. குறிப்பாக மற்றவர்களுக்கு கடன் வாங்கிக் கொடுக்க வேண்டாம். எவரையும் பகைத்துக் கொள்ளாமல் சாதுர்யமாக காலம் கடத்துவது அவசியம் இல்லையேல் வீண் வம்பு வழக்குகளில் சிக்கி பெயரைக் கெடுத்துக்கொள்ள நேரிடும்.

சனி பகவானின் பார்வை தொழில் ஸ்தானம் என்னும் கர்ம ஸ்தானத்தின் மீது படுவதால் உங்களின் அனைத்து வேலைகளும் கடுமையான உழைப்பிற்குப் பிறகே வெற்றி பெறும். எதையும் சரியாக நடந்துவிடும் என்று நினைத்து மற்றவர்களிடம் உங்கள் வேலைகளை ஒப்படைத்து செய்யச் சொல்வதும் கூடாது. உங்கள் செயல்களை நீங்களே சரியாக மேற்பார்வையிட வேண்டும்.

உத்தியோகஸ்தர்கள் உண்மையான உழைப்பை மேற்கொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வும் சம்பள உயர்வும் சிறிய தாமதத்திற்குப் பிறகே கிடைக்கும். அலுவலக வேலைகளை எச்சரிக்கையுடன் செய்யாவிட்டால் தற்காலிக இடை நீக்கம் போன்றவற்றைச் சந்திக்க நேரிடலாம். அலுவலகம் சம்பந்தமான பயணங்கள் சாதக மற்று இருப்பதால் முடிந்தால் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் பக்குவமாகப் பழகி வரவும்.

இந்த ராசி வியாபாரிகள் புதிய முயற்சிகளில் வெற்றியைக் காண்பார்கள். இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் சாதாரண நிலைமையே தொடரும். வெளியிருந்து வர வேண்டிய பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். இதனால் நீங்கள் திருப்பித்தர வேண்டிய இடங்களில் உள்ளவர்கள் உங்களை வருத்தமுறச் செய்வார்கள். ஆனால் கொடுத்த வாக்கை எப்படியோ காப்பாற்றிவிடுவீர்கள். மற்றபடி உங்கள் வியாபார யுக்திகளில் பொறுமையையும் நிதானத்தையும் கடைபிடிக்கவும்.

விவசாயிகள் கொள்முதல் லாபங்களைப் பெறுவார்கள். உங்கள் பேச்சுக்கு உங்களிடம் வேலை செய்யும் விவசாயக் கூலிகள் மதிப்பு கொடுப்பார்கள். புதிய குத்தகைகளையும் எடுக்கலாம். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். உங்கள் உழைப்புக்கு ஏற்ற வருமானங்களைக் காண்பீர்கள். அதேசமயம் நீர்ப்பாசன வசதிகளுக்குச் சற்று செலவு செய்ய வேண்டிவரும்.

அரசியல்வாதிகள் பொதுச் சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்கவும். மற்றபடி தொண்டர்கள் அனுகூலமாக நடந்து கொள்வார்கள். உங்கள் முயற்சிகளில் தடைகள் உண்டானாலும் இறுதியில் வெற்றி காண்பீர்கள். அதேசமயம் எதிர்க்கட்சியினரின் போட்டி பொறாமைகளுக்கு ஆளாக நேரிடலாம். மேலும் மேலிடத்தின் அதிருப்திக்கும் ஆளாக நேரிடலாம்.

அதனால் கட்சித் தலைமைக்குத் தகவல் அனுப்பும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். மற்றபடி பயணங்களை அதிகமாகச் செய்யும் கால கட்டமிது. கலைத்துறையினரைப் பொறுத்தவரை திறமைக்கு ஏற்ற வாய்ப்புகளைப் பெறுவார்கள். எனவே திறமைகளை அதிகரிக்கும் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். மேலும் சீரிய முயற்சியின் பேரில் உங்களின் புகழைத் தக்கவைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு சிலர் தங்கள் வாகனங்களை விற்க நேரிடலாம். மேலும் ஆடம்பர செலவுகள் செய்யாமல் கையிருப்புகளைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளவும். பெண்மணிகளைப் பொறுத்தவரை குடும்பத்தில் நற்பெயர் எடுப்பீர்கள் கணவருடன் ஒற்றுமையாகப் பழகுவீர்கள். தொலைதூரத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். வீட்டிற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள்.

குழந்தைகள் வகையிலும் தாய்வழியிலும் சிற்சில தொல்லைகள் வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். குடும்ப விஷேடங்களுக்காக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவமணிகள் நன்றாக உழைத்துப் படித்து நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உள்ளரங்கு விளையாட்டிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள். கல்வி ரீதியான பயணங்களை மேற்கொள்வார்கள். அதேநேரம் அதீத ஆவலில் அவசரபுத்தியால் சிறு தவறுகளைச் செய்து வருத்தமுறவும் நேரிடும். (தொடரும்)

# இராசி பலன்

**11.07.2007**
**(ஆனி 27, புதன்கிழமை)**
**துவாதசி முன்னிரவு 11.16 மணிவரை**
**கார்த்திகை முற்பகல் 08.19 மணிவரை**
**இராகுகாலம் 11.59-1.29 மணிவரை**
**சுபநேரம் 04.29-05.59 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | மனோசங்கடம், அதிக செலவு, போசனசுகக் குறைவு, ரோகநிலை. |
| இடபம் | வெகுமானம், சிந்தனை மிகுதி, போசன சுகம், முயற்சி கைகூடும். |
| மிதுனம் | உஷ்ண வியாதி, பிதாசிந்தை, சுபகாரியச் செலவு, திடீர் பயணம். |
| கடகம் | காரிய அனுகூலம், போசன சுகம், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| சிங்கம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, ஆரோக்கியம், நல்ல செய்தி. |
| கன்னி | சரீரப்பிரயாசை, தேசாந்திர வாசம், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு. |
| துலாம் | வாகனபயம், காரிய தடங்கல், கலகம், போசன சுகம். |
| விருச்சிகம் | களஸ்திர நன்மை, கலந்துரையாடல், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், தனவருவாய், முயற்சி கைகூடும். |
| மகரம் | வியாபார நன்மை, அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணவிரயம். |
| கும்பம் | தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், தாய்வழி உறவு, ரோகநிலை. |
| மீனம் | நற்கீர்த்தி, காரிய நன்மை, பிறர் உதவி, பொருள் சேர்க்கை. |

- வளவன்

## நவோத்யா பாடசாலை வாரம்

நவோத்யா வார ஐந்தாம் நாள் நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய நாள் நிகழ்வுகள் மொழித்திறமை மதிப்பீட்டுத் தினமாக கொண்டாடப்படவுள்ளது. இந் நிகழ்வுகள் மாணவர்களின் மொழி ஆளுமை மேம்பாட்டினை வெளிக்கொணரும் நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளது. (அ)

## புலமைப் பரிசில் ஊக்குவிப்புப் பரீட்சை

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.நகர மத்தி றோட்டரிக் கழகத்தால் வருடந்தோறும் நடாத்தப்படும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புப் பரீட்சை , நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும் எனவும், இதற்கான பரீட்சைக் கட்டணம் எதுவும் இல்லை எனவும் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

## அதிபர் தரம் III நேர்முகப்பரீட்சை

அதிபர் தரம் IIIக்கான நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாதோர் அனைவரையும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் ஏதாவதொரு தினத்தில் காலை 9மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும்படி யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சனி,ஞாயிறு தினங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெற மாட்டாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

எலும்புத் துண்டுக்காக ஒரு நேர்மையான மனிதன் தன்னை நாயாக ஆக்கிக் கொள்ள மாட்டான்.

—டென்மார்க்

வலம்புரி

# நீதிபரிபாலனத்தில் அரசியல் தலையீடு

சட்டத்திற்கு முரணாகச் செயற்படுமாறு விடுத்த வேண்டுகோளை தான் நிராகரித்ததாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியுள்ளார்.

இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரத்திற்கு ஈடாக சமாந்திரமான பதவியாக பிரதம நீதியரசர் பதவியுள்ளது. எனவே நாட்டில் அமைதி - சமாதானம் என்பவற்றைக் காப்பாற்றும் பொறுப்பு பிரதம நீதியரசரை தலைமையாகக் கொண்ட நீதிபரிபாலனத்திற்கு உண்டு.

எனவே ஒரு நாட்டில் பிரதம நீதியரசர் சுதந்திரமாக - நாட்டில் அமைதி - சமாதானம் என்பவற்றை மையமாகக் கொண்டு செயலாற்றுவதற்கான அதிகாரமும் அந்தஸ்தும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

எனினும் இந்நாட்டில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அவர்கள் சட்டத்திற்கு முரணாகச் செயற்படுமாறு சிலர் விடுத்த வேண்டுகோளை தான் நிராகரித்ததாகக் கூறியுள்ளார்.

பிரதம நீதியரசரின் மேற்போந்த கூற்றிலிருந்து ஓர் உண்மை புலப்படுகின்றது. அதாவது பிரதம நீதியரசரின் சுதந்திரத்தில் - தீர்ப்பில் தலையீடு நடைபெறுகின்றது என்பதே அந்த உண்மையாகும்.

பிரதம நீதியரசரின் தீர்ப்பில் தலையிடுவது என்பது ஒரு சாதாரண நிகழ்வு மட்டுமன்றி, சாதாரணமான எவரும் அதனைச் செய்ய முடியாது என்பதும் தெரிகின்றது.

எனவே பிரதம நீதியரசரின் தீர்ப்பில் அரசியல்வாதிகள், அதிலும் ஆளும் அதிகாரத்தின் உச்ச நிலையைக் கொண்ட்வர்களே தலையிட்டுள்ளனர் என்ற முடிபை நாம் அனுமானிக்க முடியும்.

அரசியல் சக்திகளின் தலையீட்டை தாங்கிக் கொள்ள முடியாமலே பிரதம நீதியரசர் சட்டத்திற்கு முரணாகச் செயற்படுமாறு சிலரால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தான் நிராகரித்ததாகப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசரின் மேற்போந்த கூற்றுத் தொடர்பில் தலையிட்ட விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவது ஜனாதிபதியினதும் அரசினதும் தலையாய கடமையாகும்.

அதேநேரம் இலங்கையில் நீதிபரிபாலனம் சுதந்திரமாக இடம்பெறவில்லை. அங்கு அரசியல் தலையீடு உண்டென்பதற்கு பிரதம நீதியரசரின் கூற்று போதுமான - தக்க சான்றாகும்.

எனவே பிரதம நீதியரசரின் தீர்ப்பில் தலையிட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த நீதிபரிபாலனமும் முன்வர வேண்டும்.

# காரைநகரிலிருந்து விறகு எடுத்துச் செல்ல உதவி அரச அதிபரின் அனுமதி பெறவேண்டும்

காரைநகர் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் ஊரி அகழ்வதைத் தற்காலிகமாகத் தடை செய்வதென காரைநகர் சூழல் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட சூழல் முகாமைத்துவக் கூட்டம் அண்மையில் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

காரைநகர் வியாவில், மருதபுரம் ஆகிய கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பின் தாக்கம் மிக அதிகமாகவுள்ளதால் [illegible] தேச சுற்றாடல் அதிகாரியின் ஆய்வுக்காக தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பச்சை மரம் தறித்தல், விறகு கொண்டு செல்லல் தொடர்பாகவும் பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

❖ காரைநகரிலிருந்து பூவரசு, மஞ்சள் வண்ணா, கொய்யா, இலந்தை என்பன கொத்துவிறகாக மட்டும் கொண்டு செல்ல திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் அனுமதிக்கப்படும்.

❖ கொத்து விறகு துவிச்சக்கரவண்டியில் கொண்டு செல்வதாயினும் உதவி அரச அதிபர் பணிமனையில் உரியவர்களின் அனுமதி பெற்றுச்செல்ல வேண்டும். தவிர இரு சக்கர உழவு இயந்திரத்தில் விறகு கொண்டு செல்ல வேண்டும் எனில் [illegible]க் காணியுடையவர்கள் மட்டுமே சூழல் முகாமைத்துவக் குழு, உதவி அரச அதிபர் ஆகியவர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு [illegible]ல்ல முடியும்.

❖ பனை மர எச்சங்கள் (மட்டைகள்) திங்கள், [illegible]தன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8 மணி முதல் [illegible] மணி வரை [illegible]டு செல்ல முடியும். (ச-246)

# நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிடக் கூடாது

## ஜே.வி.பி. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் உள் விவகாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் எந்தவொரு வெளிநாடும் தலையிடக் கூடாது. அதற்கு இடம் வழங்கவும் முடியாது. நாட்டின் இறையாண்மையை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு முதலில் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சர்வகட்சி ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றபோதும் அதில் மக்கள் பங்கு பற்றுதல் இருக்கின்றதா? -எனக் கேள்வி எழுப்பினார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றபோது வடக்குக் கிழக்கு மக்களையும் இணைத்துக் கொண்டு பேசவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஏழு மாகாண சபைகளிலுள்ள ஜே.வி.பி. உறுப்பினர்களை இணைத்து ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண சபைகளின் குழுமம் என்ற வேலைத் திட்டத்தில் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தேசிய நூலக ஆவணக்கல் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

இனப்பிரச்சினைக்கு மாகாண சபைகள் மூலமாக தீர்வு காணலாம் என்றே மாகாண சபை ஏற்படுத்தப்பட்டது.எனினும் அந்த முறை தோல்வியடைந்து விட்டது. மாகாண சபை முறையை மக்கள் விடுதலை முன்னணிஅன்று எதிர்த்தது போல் என்றுமே எதிர்க்கும்.எனினும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத சில சட்டமூலங்களை அரசாங்கம் மாகாண சபைகளில் எழுத்து மூல ஆவணத்தின் மூலமாக சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது என்பதால் மாகாண சபைகளைப் பலப்படுத்த வேண்டும்.

அதற்கு முன்னதாக பயங்கரவாதத்திலிருந்து மக்களை மீட்க வேண்டும் என அவர் கூறினார்.ஆயுத அதிகாரம் நாட்டில் அரசாங்கம் ஒன்றுக்குத்தான் இருக்கின்றது. அதற்குத்தான் சட்டரீதியான ஆயுத பலம் இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலமாக தீர்வு காண வேண்டாம் என்று சிலர் கூறுகின்றனர்.

சட்டரீதியான ஆயுத அதிகாரம் அரசாங்கத்திடம் மட்டுமே இருக்கின்றது. அந்த அதிகாரம் மற்றொரு தரப்பினரிடமிருந்தால் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். நாம் சர்வதேச அழுத்தத்தை விருப்பத்தின் பேரிலேயே பெற்றுக் கொண்டுள்ளோம்.

நாட்டின் உள் விவகாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் எந்த வெளிநாடுகளும் தலையிடக் கூடாது. அதற்கு இடம் வழங்கவும் முடியாது. அப்படி நாம் செய்தால் நாம் விருப்பத்துடனேயே இறைமையை விட்டுக் கொடுத்துள்ளோம்.

நாட்டின் இறைமையை மீண்டும் நிலைநிறுத்த முதலில் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும். மனித உரிமைகள், உள்ளூர் பாதுகாப்பு, நாட்டைப் பிரிக்க ஆயுதம்ஏந்தியுள்ள குழுவுக்குஎதிராக அரசாங்கப் படைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று யாரும் கூற முடியாது.

இந்த விடயத்தில் மனித உரிமைகள் மற்றும் உள்ளூர் பாதுகாப்பு இரண்டுவிடயங்களுமே இணைக்கப்பட்டுள்ளன. அதனால்தான் சர்வதேச சமூகத்தின் குரல் வலுப்பெற்றுள்ளது.மனித உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். அதில் குறைபாடுகள் இருந்தால் சட்டத்தைப்பயன்படுத்தி நாட்டிற்குள்ளேயே தீர்க்க வேண்டும்.

மனித உரிமைகளையும் உள்ளூர் பாதுகாப்பையும் இணைத்தால் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படும். கும்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. மனித உரிமைகள் தொடர்பாக குரல் கொடுக்கின்ற சர்வதேச சமூகம் ஆயுதம் ஏந்தியுள்ள ஒரு தரப்பினரை மட்டும் ஏன் நிராயுதபாணிகளாக முயற்சி செய்கின்றனர் என்ற கேள்வி எழும்புகின்றது.

எமது சுதந்திரத்தைப் பறிக்கின்றபோது நாம் கும்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. அப்படியிருந்தோமேயானால் இறைமை, ஒருமைப்பாடு, சுதந்திரம் போன்ற சவால்களை வென்றெடுக்க முடியாது.

அத்துடன் சகலரும் சந்தோஷப்படுத்தக் கூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் புதிய முன்னணியின் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளை அழைக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணி ஏற்படுத்தியுள்ள புதிய முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகள்தான் இரண்டாகப் பிரிந்துள்ளன.

ஜே.வி.பி. எப்போதும் பிளவுபடாது. நான்குபேர் அரசாங்கத்துடன்இணைந்து கொள்ள விரும்புகின்றனர் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. எனினும் ஜே.வி.பி. அதன் கொள்கையிலிருந்து என்றுமே விலகி செல்லாது. அரசாங்கம் மற்றும் கட்சிக்குள் முரண்பாடுகள் இருந்தால்தான் நிர்வாகம் செய்யமுடியும் என்ற கருத்து பரவலாக நிலவுகின்றது.

எனினும் அதுதான் எமது கட்சியின் கொள்கையில் இல்லை. அரசாங்க நிறுவனங்களில் ஊழல் அதிகரித்துள்ளன. களவு செய்யாதவர்களினால்தான் கள்வனைத் தண்டிக்க முடியும். அந்தத் தகுதி ஜே.வி.பிக்கு மட்டுமேயிருக்கின்றது என அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (ச-5)

# புரிந்துணர்வின் மூலம் மாத்திரமே இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம்

## பிரதம நீதியரசர் உரை

இனங்களுக்கிடையே ஒற்றுமையின்மை காரணமாகவே நாட்டில் தற்போது நிலவும் இனப்பிரச்சினைஏற்பட்டது. புரிந்துணர்வின் மூலம் மாத்திரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் எந்தவொருபிரச்சினையையும் சட்டத்தின் உதவியுடன் தீர்க்கலாம். சட்டத்தின் உதவியுடன் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதி வழியில் தீர்வு காணலாம் என்றும் அவர் மேலும் கூறினார். மல்வானை அல்முபாறக் தேசிய பாடசாலையில் நடைபெற்ற குற்றம், குற்றத் தடுப்புக் குறித்து அறிவூட்டும் கருத்தரங்கிலும் செயலமர்விலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதம நீதியரசர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

சட்டத்தை மீறுபவர்களும் சட்டத்தைக் கையில் எடுப்பவர்களும் கடைசியில் அழிந்து போகின்றார்கள். உரிமைகளைப் பெற வேண்டுமானால் சட்டரீதியாகப் பெற வேண்டும். நான் முதலில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினேன். அங்கு அக்காலத்தில் முன்னேற்றம் காணப்பட்டது.

ஆனால் இப்போது நீதிமன்றக் கட்டடம் மாத்திரமே மீதமாகவுள்ளது. நான் விழாக்களில் கலந்து கொள்வதில் அவ்வளவு ஆசை காட்டுவதில்லை. இதுபோன்ற பிரயோசனமான விடயங்களில் கலந்து கொள்வேன். எனக்கு 38 வருட கால சட்டத்துறை அனுபவம் உண்டு.

அதனால் இயன்றவரை மக்களுக்குக் கூடிய விரைவில் நியாயம் வழங்க நீதிபதிகளைப் பணித்துள்ளேன். பொதுமக்கள் பொலிஸாருடன் ஒத்துழைத்து செயற்பட்டால் குற்றங்களை முற்றாகத் தடுக்க முடியும். சிங்கள மன்னர்காலத்திலிருந்து மல்வானை வரலாறு முக்கிய இடமாக இருந்துள்ளது.

தற்போது இந்நாட்டு முஸ்லிம்கள் பள்ளிவாசல் பிரச்சினைகள் நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதில்லை. அது ஒரு நல்ல விடயமாகும். முஸ்லிம்களின் குவாதி நீதிமன்றத்தைச் சீராக இயங்க வைப்பதில் எமது திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல முஸ்லிம் நாடுகள் இதற்கு உதவி புரிய முன்வந்துள்ளது. நான் 1960 இல் நீதித்துறைக்கு வந்தேன். 70 வரை எவ்வித பிரச்சினையுமில்லை. 71இல் தான் பிரச்சினை ஆரம்பித்தது. இலங்கையில் 300 நீதிவான்கள் உள்ளனர். நான் சர்வதேச நீதிமன்றத்தில் உபதலைவராக கடமையாற்றியுள்ளேன். இன்னும் சிறிது காலத்தில் ஓய்வு பெறுவேன் என்றார். (ச-5)

# யாழ்.பாடசாலை ஒன்றுகூடல்கள் தெருக்களில் நடைபெற்று வருகின்றன

## ஐ.ஆர்.ஐ.என்.செய்தி நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பாடசாலை வகுப்புக்கள் தகரக்கொட்டகைக்குள் நடாத்தப்படுவதுடன் பாடசாலையின் ஒன்றுகூடல் நிகழ்வுகளும் வீதியிலேயே நடாத்தப்படுவதாக ஐ.ஆர்.ஐ.என்.செய்தி நிறுவனம் தனது ஆய்வுச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியின் விபரம் வருமாறு, யாழ்.குடாநாட்டை ஆழிப்பேரலை தாக்கி இரண்டரை வருடங்கள் கடந்த நிலையிலும் பருத்தித்துறை வல்வை சிவகுரு வித்தியாலயத்தைச் சேர்ந்த 432 மாணவர்கள் தமது பாடசாலையின் மீள் கட்டுமானப் பணிகள் முடிபடைவதனை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

பருத்தித்துறையில் உள்ள மற்றும் ஒரு பாடசாலையான வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடப்பணிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் அமைப்பான யுனிசெப்பினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பணிகளை ஐக்கிய நாடுகள் சபையின் திட்டமிடல் சேவைகள் அமைப்பு மேற்பார்வை செய்து வருகிறது. மோதல்கள் நடைபெற்று வரும் யாழ்.குடாநாட்டில் நடைபெறும் கட்டுமானப் பணிகள் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக மந்தமாகவே நடைபெற்று வருகின்றது.

பணிகள் நடைபெறும் பகுதிக்கு சென்று வருவதும் மிகவும் கடினமாக உள்ளது. கட்டடப் பொருட்களின் தொடர்ச்சியான பற்றாக் குறையினால் உரிய காலத்தில் பணிகளை நிறைவு செய்வது சாத்தியமற்றுக் காணப்படுகிறது.

2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்தப் பாடசாலைகளுக்கான கட்டட வேலைகள் ஆரம்பமாகியிருந்தன. அது யூன் 2007 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தமது பாடசாலை ஆழிப்பேரலையின் போது முற்று முழுதாக அழிவடைந்து விட்டதாகவும் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகும் வரையிலும் தாம் நான்கு வெவ்வேறான இடங்களில் பாடசாலையை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதாகவும் அதன் அதிபர் ஏ.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

ஆண்டு ஒன்றிலிருந்து 11 வரையிலான மிகவும் நேர்த்தியாகப் பாடசாலை உடை அணிந்து பாடப்புத்தகங்களுடன் உள்ள இந்தச் சிறுவர்களுக்கு ஏனைய பாடசாலைகள் உதவியிருந்தன. அவர்களிடம் இருந்து பெறப்பட்ட 22 பழைய மேசைகளைக் கொண்டு தகரத்தினால் அமைக்கப்பட்ட கொட்டகைக்குள் அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மிகவும் நெருக்கமான வகுப்புக்களையும் மிக அதிகமான சத்தங்களையும் நீங்கள் பார்க்கலாம். எமது பாடசாலையின் ஒன்று கூடல் நிகழ்வை நாம் வீதியில்தான் நடாத்திவருகின்றோம் என சிவநாதன் மேலும் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையினாலும் போரினாலும் அழிவடைந்த பகுதிகளை புனரமைக்கும் பணிகளானது யாழ்.குடாநாடு முழுவதிலும் கிடப்பில் உள்ளதையும் சில பகுதிகளில் அது ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும் இன்றுவரை முற்றுப் பெறாத பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகள் எடுத்துக்காட்டியுள்ளது.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையில் நடைபெறும் பெருமளவான கட்டடப்பணிகள் பாதுகாப்புக் கெடுபிடிகளினால் கடுமையான மந்த நிலையை அடைந்துள்ளது.

இதில் குறிப்பாக பகல் நேரத்தில் அமுல் படுத்தப்படும் ஊரடங்குச் சட்டமும் பணிகளை மிகவும் தாமதமாக்கியுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் திட்டமிடல் சேவைகள் அமைப்பின் வடக்கு-கிழக்கு பகுதிக்கான பிராந்திய இணைப்பாளர் எஸ்.சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மூடப்பட்ட ஏ-9 நெடுஞ்சாலை யாழ்.குடாவிற்கு பொருட்களை கொண்டு செல்லும் ஒரே ஒரு பாதையை இல்லாது செய்ததுடன் கட்டுமானப் பணிகளையும் முடக்கியுள்ளது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்று வருவதனால் யாழ்.குடாநாடு தற்போது முழுமையாக மட்டுப்படுத்தப்பட்ட கடல்வழி மற்றும் வான் வழிப்போக்குவரத்திலேயே முழுமையாகத் தங்கியுள்ளது என ஆய்வுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மேலும் ஒரு சந்தேகநபர் அவுஸ்திரேலியாவில் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்துள்ளார் என்ற சந்தேகத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏ.எப்.பி.செய்தி வெளியிட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரான ஆறுமுகம் ரஜீவன் (வயது 41) சிட்னி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின் மெல்பேனிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் விடுதலைப்புலியாக இருந்து அவ் அமைப்புக்கு உதவி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இரு தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆறுமுகம் ரஜீவன் மூன்றாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-1)

## ரெலிக்கொம் கட்டணங்கள் 8.72 வீதத்தினால் குறைப்பு!

ரெலிக்கொம் தொலைபேசிக் கட்டணங்களை 8.72 வீதத்தினால் குறைக்க தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இக் கட்டணக் குறைப்பு 2007 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரெலிக்கொம் தொலைபேசிக் கட்டணங்களை 2007 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 8.72 வீதத்தினால் குறைப்பது குறித்து ஆராய்ந்து நீதி மன்றத் துக்கு அறிவிக்குமாறு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் ரெலிக்கொம் நிறுவனம் உட்பட ஐந்து நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

ரெலிக்கொம் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக ரெலிக்கொம் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் விசேட மேன்முறையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்தது. இம் மனு மீதான விசாரணையின் போதே உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று முன்தினம் வழங்கியது.

கட்டணக் குறைப்பு தொடர்பாக ஆராய்ந்து ஆகஸ்ட் 27 ஆம் திகதியன்று அறிவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனடிப்படையிலேயே ரெலிக்கொம் தொலைபேசிக் கட்டணங்களை குறைக்க தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்கு தீர்மானித்துள்ளது.

வீட்டுப் பாவனைக்கான நிலையான மாதாந்தக் கட்டணம் 495 ரூபாவிலிருந்து 350 ரூபா வரையிலும் வியாபாரப் பாவனைக்கான நிலையான மாதாந்தக் கட்டணம் ஆயிரம் ரூபாவிலிருந்து 950 ரூபா வரையிலும் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தொப்பிக்கலவை கைப்பற்றும் இறுதிக்கட்டத்தில் படையினர்

தொப்பிக்கலவை கைப்பற்றும் இறுதிக் கட்டத்தை படையினர் நெருங்கியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது; நரக்கமுல்லைக்கும் தொப்பிக்கலவுக்கு இடையிலும் தொப்பிக்கலவுக்கு மேற்குப்பகுதியிலும் இருக்கின்ற சிறுகுழுக்களை படையினர் சுற்றிவளைத்துள்ளதாகவும் அவர் கூறினார். திடீர் திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் பெருமளவான ஆயுதங்களை தாம் மீட்டுள்ளதாகவும் புலிகளின் எஞ்சியுள்ள முகாம்களை கைப்பற்றும் வரை படை நடவடிக்கை தொடருமெனவும் அவர் கூறியுள்ளார். (ச)

## புலிகளின்...

இராணுவ முகாம்களில் இருந்தே படையினர் எறிகணை தாக்குதல்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை வவுனியா நகரப் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மாங்குளத்தில் கிளைமோர்...

தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் இரண்டுபேர்படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்தினைத் தொடர்ந்து கண்காணிப்புக்குழு சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டது. ஆரம்பத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எட்டுப்பேர் கொல்லப்பட்டதாக தெரிவித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பின்னர் இழப்புக்கள் குறித்து சேதவிபரம் கிடைத்துள்ளது. அதன்படி 5 பேர் கொல்லப்பட்டனர் என்றும் குறிப்பிட்ட தாக்குதல் கிளைமோர்த் தாக்குதல் எனவும் உறுதி செய்தனர்.

தாக்குதல் சம்பவத்தினைத் தொடர்ந்து குறிப்பிட்ட பகுதி விடுதலைப்புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.தாக்குதல் மேற்கொண்டோரைக் கண்டுபிடிக்கும் நோக்கிலேயே இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இளந்திரையன் தெரிவித்தார். (ச)

## தமிழர்களை...

கும் சிங்களவர்களுக்கும் ஒருவித பிரச்சினையும் இல்லை. அண்மை யில் தமிழகம் சென்றிருந்தபோது அங்குள்ள ஊடகங்களுக்கு பேட்டியளிக்கும்போது இதனைத் தான் தெரிவித்தேன்.

இதன் மூலம் தமிழக மக்களிடையே உள்ள சில சந்தேகங்களை நான் களைந்துள்ளேன் என அவர் கூறினார். (ச-5)

## நோர்வேத் தூதுவர்...

நோர்வேத் தூதுவரின் இவ் விஜயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ராஜிவ் விஜேயசிங்க நோர்வேத் தூதுவர் நேற்று முன்தினம் நண்பகல் கிளிநொச்சிக்குச் செல்வது தொடர்பாக கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதுடன் சமாதான செயலகத்தின் ஏற்பாட்டில் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்ததாகவும் பேராசிரியர் விஜே சிங்க குறிப்பிட்டார்.

தூதுவரின் பயணத்தின்போது பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்படவேண்டுமென்பது அவசியமானது எனவும் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஹான்ஸ் பிறட்ஸ்கரின் பணி அடுத்த மாதம் ஓய்வு பெறவுள்ள நிலையில் அவரின் கிளிநொச்சி விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பிறட்ஸ்கரின் இறுதி சமாதான முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சியில் சந்திப்பினை முடித்துக்கொண்டு அவர் அம்பாந்தோட்டை,சிகிரியா ஆகிய இடங்களுக்கும் செல்லவுள்ளார். (எ-1)

## கிழக்கை மீட்பது குறித்து...

முகாம்கள் கிழக்கில் இருந்தன. கிழக்கை மீட்பதற்கான இன்றுவரை இராணுவம் எடுத்துள்ள முன்னெடுப்பின் மூலம் ஈழத்தை அடைந்து கொள்ளும் புலிகளின் எதிர்பார்ப்பு 90 வீதம் அசாத்தியமாகியுள்ளது.

நாட்டின் பொருளாதார கேந்திர நிலையம் கிழக்கில் தான் உள்ளது. திருகோணமலைத் துறைமுகம் பிரபாகரனின் மிகுந்த எதிர்பார்ப்பாக இருந்துவருகிறது. அத்துடன் பிரதான அனைத்துலக நிறுவனங்கள் பலவும் கிழக்கில்தான் அமைந்துள்ளன.

பிறிமா நிறுவனம்,டோக்கியோ சீமெந்து நிறுவனம் என்பன இதில் குறிப்பிடத்தக்கது. சுற்றுலாத்துறை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக கிழக்கு மாகாணம் காணப்படுகிறது.

கிழக்கில் மட்டும் சுமார் 461 கிலோ மீற்றர் தூர கடற்கரைப்பிரதேசம் உள்ளது. அத்துடன் வடக்குக்குச் செல்லும் பிரதான பாதைகள் கூட கிழக்கினூடாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முக்கிய தளமாக கிழக்கு மாகாணம் பயன்படுத்தப்பட்டது. மட்டக்களப்பு முஸ்லிம்கள் படுகொலை, அரந்தலாவை படுகொலை மற்றும் 600 பொலிஸ் உறுப்பினர்களின் மீதான படுகொலை என எத்தனையே அசம்பாவிதங்களை புலிகள் இங்கு தான் முன்னெடுத்தனர்.

வரலாற்று உண்மைகள் பல இவ்வாறு இருக்கையில் இது ஒரு வீணான நடவடிக்கை எனவும் அரசியல் லாபம் தேடும் ஒரு முயற்சி எனவும் சித்திரிக்க எடுக்கும் முயற்சி தேசத்துரோகமானது. சவுதி அரேபிய நீதிமன்றம் இலங்கைப் பெண்ணுக்கு வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யும் மேல் முறையீட்டை முன்வைப்பதற்காக இலங்கையிலிருந்து வெளிவிவகார பிரதி அமைச்சர் தலைமையில் ஒரு குழு சவுதி அரேபியாவுக்கு இன்று செல்லவுள்ளது.

இந்த விவகாரம் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறுவது தவறானது. இச் சம்பவம் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் ஒன்று திங்கட்கிழமை வெளி விவகார அமைச்சில் எனது தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள பெண்ணின் பெற்றோர்,நீதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சவுதி அரேபியா செல்லும் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இக் குழு சவுதியில் உள்ள குறித்த பிரதேசத்தின் ஆளுநரை இலங்கை அரசு சார்பாக சந்தித்து இந்த மேன்முறையீட்டைச் செய்யவுள்ளது.

நான்கு மாதக்குழந்தையை சவுதி அரேபியாவில் கொன்றதாகக்கூறி மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் முஸ்லிம் பணிப் பெண்ணான றிஸானா நபீக் என்பவருக்கு கடந்த மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல் முறையீடு செய்வதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக் காலக்கெடு இன்னும் ஒரு வாரத்தில் முடிபடையவுள்ளது என்றார் ஹெகலிய. (எ-1)


BOC

மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 30.04.2006ற்கு முன்னர் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை<br>யாழ்.2-ம் மேற்தரக்கிளை | யாழ்.மேற்தரக் கிளை யாழ்ப்பாணம் 2007 யூலை மாதம் 14-ம் 15-ம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி (வட பிராந்தியம்),
உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3126 , 021 222 2735

10.07.2007 (சி-216)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.